**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 101/2015**

**அ.சா : 1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திநேஷ்குமார் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | ஜெகன்நாதன் |
| ஊர் | : | கோயமுத்தூர் |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | Senior Manager, Indian Bank |
| மதம் | : | |
| வயது | : | 33 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 27.02.2024.**

**2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது. 1 வது எதிரி வேறு வழக்கில் நீதிமன்ற காவலில் உள்ளதால் சிறையில் இருந்து Hybrid முறையில் விசாரணைக்கு ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னையில் இந்தியன் வங்கி தலைமையகத்தில் முதுநிலை மேளாலராக பணி செய்து வருகிறேன். கண்ணனடஅள்ளி இந்தியன் வங்கி கிளை மேளாலராக 2014 முதல் 2017 வரை வேலை செய்தேன். எங்கள் வங்கியின் முன்பாக 24 மணி நேரமும்செயலல்படும் வகையில் ATM வைத்துள்ளோம், 2015 ம் வருடம் ஜனவரி மாதம் 12 ம் தேதி அதிகாலை 02.00 மணியளவில் ஒரு அழைபேசி அழைப்பு எனக்கு வந்தது. அந்த அழைபேசியில் ஒரு பொதுமக்கள் பேசினார். அவர் எங்கள் வங்கியின் ATM மிசினை உடைக்க முயற்சி செய்வதாகவும், வந்து பார்க்குமாறு கூறினார். மேற்படி சங்கதியை பொறுத்து எனது உயர் அதிகாரிக்கு தகவல் உடனடியாக தெரிவித்தும், என்னுடன் பணியாற்றும் மற்ற ஊழியர்களுக்கும் தகவல் தெரிவுத்துவிட்டு எங்கள் வங்கிக்கு அதிகாலை சுமார் 02.30 மணியளவில் சென்றேன். நான் எங்கள் வங்கியின் ATM அறைக்கு சென்றபோது ATM மிசினின் திரை உடைக்கப்பட்டு இருந்தது. அருகில் ஒரு இரும்பு கம்பியும் இருந்தது. அப்போது

என்னுடன் எங்கள் வங்கியின் உதவி கிளை மேளாலர் அபைக்குமார் தாஸ் உடன் இருந்தார். நான் உடனடியாக சம்பவம் குறித்து மத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததாகும். **புகார் அ.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவ காலத்தில் எங்கள் வங்கியில் என்னோடு உதவி கிளை மேளாலர் அபைக்குமார் தாஸ், அஜய் இளநிலை உதவியாளர் ராஜமாணிக்கம் காசாளர், முருகன் நகை மதிப்பீட்டாளர், புகழேந்தி நகை மதிப்பீட்டாளர், ராஜேஸ்வரி தூய்மை பணியாளர் ஆகியோர் பணிபுரிந்தார்கள். நான் புகார் கொடுத்த பிறகு போலீசார் எங்கள் வங்கிக்கு வந்து விசாரணை மேற்கொண்டார்கள். எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது ஆகும். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பார்வை மகஜரில் என்னுடன் உதவி கிளை மேளாலர் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

1,2,4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

(1,2,4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார். குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சுருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஓம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி.எண்: 101/2015**

**அ.சா : 2**

| | | |
|---|---|---|
| பெயர் | : | முருகன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | லட்சுமணன் |
| ஊர் | : | வளத்தானூர் |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | நகை மதிப்பீட்டாளர் |
| மதம் | : | |
| வயது | : | 47 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 27.02.2024.**

**2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது. 1 வது எதிரி வேறு வழக்கில் நீதிமன்ற காவலில் உள்ளதால் சிறையில் இருந்து Hybrid முறையில் விசாரணைக்கு ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது வளத்தானூரில் வசித்து கண்ணண்டஅள்ளி இந்தியன் வங்கியில் நகை மதிப்பீட்டாளராக பணி செய்து வருகிறேன். அ.சா.1 தினேஷ்குமார் எங்கள் வங்கியின் கிளை மேளாலர் ஆக சம்பவ காலத்தில் பணியாற்றினார். 12.01.2015 ம் வருடம் அதிகாலை சுமார் 03.00 மணியளவில் கிளை மேளாலர் போன் செய்தார். அதில் கண்ணன்டஅள்ளி வங்கியின் முன்பாக வைக்கப்பட்டு இருந்த ATM யை யாரோ உடைத்துவிட்டதாக கூறினார். உடனே வங்கிக்கு வருமாறு கூறினார். நான் எனது வீட்டில் இருந்து வங்கிக்கு அதிகாலை சுமார் 04.00 மணியளவில் வந்து இருந்தேன். நான் வந்து பார்த்தபோது மேற்படி அறையின் கண்ணாடி கதவு திறந்து இருந்தது. ATM மிசினின் திரை உடைக்கப்பட்டு இருந்தது. நான் வந்து பார்த்தபோது அங்கு எங்கள் வங்கியின் கிளை மேளாலர் தினேஷ்குமார், மற்றும் உதவி மேளாலர் அபைக்குமார்தாஸ் மற்றும் காவல் துறையினர் அங்கு இருந்தார்கள். ATM மிசினுக்கு வேறு எவ்வித சேதாரமும் எற்படவில்லை. பணம் எடுக்கப்படவில்லை. இது குறித்து எங்கள் வங்கி

மேளாலர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1,2,4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1,2,4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார். குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஓம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 101/2015**

**அ.சா : 3**

| | | |
|---|---|---|
| பெயர் | : | அபய்க்குமார் தாஸ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | தனிஸ்வர்தாஸ் |
| ஊர் | : | தருமபுரி |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | Senior Manager. Indian Bank |
| மதம் | : | |
| வயது | : | 37 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 27.02.2024.**

**2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது. 1 வது எதிரி வேறு வழக்கில் நீதிமன்ற காவலில் உள்ளதால் சிறையில் இருந்து Hybrid முறையில் விசாரணைக்கு ஆஜர்படுத்தப்பட்டார்.**

**சாட்சி ஆங்கிலத்தில் கூறியதை என்னால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது தருமபுரி இந்தியன் வங்கி மண்டல அலுவலகத்தில் முதுநிலைமேளாலராக பணிசெய்து வருகிறேன். சம்பவ காலத்தில் கண்ணன்டஅள்ளி இந்தியன் வங்கியின் உதவி கிளை மேளாலராக பணி செய்து வந்தேன். சம்பவ காலத்தில் அ.சா.1 தினேஷ்குமார், எங்கள் வங்கியில் கிளை மேளாலராக பணிசெய்தார். கடந்த 12.01.2015 ம் தேதி எங்கள் வங்கியின் கிளை மேளாலர் அ.சா.1 தினேஷ்குமார் அதிகாலை சுமார் 02.00 மணியளவில் எனக்கு போன் செய்து எங்கள் வங்கியின் முன்பாக உள்ள ATM மிசினில் இருந்து பணத்தை திருட முயற்சித்துள்ளார்கள் என்றும், உடனடியாக வங்கிக்கு வருமாறு தெரிவித்தார். நான் வங்கிக்கு அதிகாலை 02.30 மணியளவில் வந்தேன். அப்போது அங்கு எங்கள் வங்கியின் கிளை மேளாலர் அங்கு இருந்தார். நான் ATM மிசின் வைத்திருந்த அறையை பார்த்தபோது மேற்படி மிசினில்

இருந்து பணத்தை திருட முயற்ச்சித்தது தெரியவந்தது. மேற்படி ATM மிசின்னின் திரை உடைக்கப்பட்டு இருந்தது. ஆனால் பணம் எதுவும் திருடு போகவில்லை. பணம் வைக்கும் வாலட் பாதுகாப்பாக இருந்தது. மேற்படி சம்பவம் குறித்து கிளை மேளாலர் மத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதன் பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை மேற்கொண்டார்கள்.என்னிடம் காட்டப்படும பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது ஆகும். மேற்படி கையெழுத்தை சம்பவஇடத்தை பார்வையிட்டதற்காகவும், பார்வை மகஜர் வரைபடம் தயார் செய்ததற்காகவும் சாட்சியாக என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். அ.சா.2 முருகன் சம்பவ காலத்தில் எங்கள் வங்கியில் நகை மதிப்பீட்டாளராக பணி செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1,2,4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1,2,4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார். குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)

சாட்சி ஆங்கிலத்தில் கூறியதை என்னால் தமிழில்
மொழிபெயர்க்கப்பட்டு தட்டச்சருக்கு கூறப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு மேற்படி மொழிபெயர்ப்பு
சாட்சிக்கு எடுத்து ஆங்கிலத்தில் கூறப்பட்டு சாட்சி,
சரியென ஒப்புக்கொண்டார்.

ஓம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி.எண்: 101/2015**

**அ.சா : 4**

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜேஸ்வரி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | நாரயணன் |
| ஊர் | : | மத்தூர் |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | துப்புறவு பணியாளர், இந்தியன் வங்கி |
| மதம் | : | |
| வயது | : | 55 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 27.02.2024.**

**2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது. 1 வது எதிரி வேறு வழக்கில் நீதிமன்ற காவலில் உள்ளதால் சிறையில் இருந்து Hybrid முறையில் விசாரணைக்கு ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் சம்பவ சமயத்தில் கண்ணன்டஅள்ளியில் உள்ள இந்தியன் வங்கி கிளையில் துப்புறவு பணியாளராக பணிபுரிந்தேன். அ.சா.1 மேற்படி வங்கியின் கிளை மேளாலராக பணியாற்றினார். அ.சா.2 மேற்படி வங்கியின் நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்து வருகிறார். அ.சா.3 மேற்படி வங்கியின் சம்பவ சமயத்தில் உதவி கிளை மேளாலராக பணியாற்றி வந்தார். எங்கள் வங்கியின் முன்புறம் ATM உள்ளது. கடந்த 2015 ம் வருடம் ஒரு நாள் இரவில் வங்கியின் முன்பு உள்ள ATM ன் மிசினின் திரை உடைக்கப்பட்டு திருட முயற்சித்தாக மறுநாள் காலையில் வேலைக்கு வந்தபோது தெரியவந்தது. பணம் எதுவும் திருடு போகவில்லை. மிசினின் திரை மட்டும் சேதப்படுத்தி இருந்தது. இது குறித்து அ.சா.1 காவல் நிலையத்தில் புகார்அளித்தார் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1,2,4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1,2,4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார். குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சுருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஓம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.